10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 177 வெள்ளிக்கிழமை நவம்பர் 17 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48


## பொலிகண்டியில் மூதாட்டியின் சடலம்

வடமராட்சி, நவ.17

பொலிகண்டி ஆலடிப் பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டி ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த இ.மல்லிகா தேவி(வயது-62) என்ற மூதாட்டியே அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார். குறித்த வயோதிபமாது வின் பிள்ளைகள் வெளிநாட்டில் இருப்பதாகவும், கணவரைப் பிரிந்து 06

# மைத்திரியில் நம்பிக்கையில்லை

## சர்வதேசமே நீதி தர வேண்டும்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை



கொழும்பு, நவம்பர் 17

“ஜனாதிபதி சுற்றிச் சுற்றி காணாமல் போனோர் அலுவலகத்தைப் பற்றிக் கதைத்தாரே தவிர, உருப்படியாக வேறெதையும் – நம்பிக்கை தரக் கூடிய உறுதிமொழிகள் எதனையும் – தரவில்லை. ஜனாதிபதி எங்களுக்கு எந்தவொரு தீர்வையும் தரமாட்டார். அவரில் நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். எனவே சர்வதேசம் இந்த விடயத்தில் தலையிட்டு எங்கள் பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தரவேண்டும்” இவ்வாறு கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளார்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க நேற்றுக் கொழும்பு சென்றிருந்தனர். பகல் 12.30க்குச் சந்திப்பதாக நேரம் வழங்கிய ஜனாதிபதி, பிற்பகல் 2 மணிக்கே வந்தார். வந்தவுடன் மூவர் மாத்திரமே தன்னுடன் கலந்துரையாட முடியும் என நிபந்தனை விதித்தார். ஆயினும், 06



## கிணற்றுக்குள் கல்லறைகள்

மல்லாவி,நவ.17

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்ல வளாகக் கிணறு ஒன்றில் இருந்து மாவீரர்களின் கல்லறைகள் சில நேற்று மீட்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு அப்பகுதி மக்கள் 06

## மகிந்தவின் ஆதரவு அரசியலமைப்புக்குத் தேவை

### கோரிக்கை விடுத்தார் சம்பந்தன்

கொழும்பு,நவ,17

“ ஒன்றுபட்ட மக்களாக நாம் வாழ்வதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கும், புதிய அரசியலமைப்புக்கு மகிந்த ராஜபக்ச ஆதரவளிக்க வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவரு 06



## இரகசிய முகாம்கள் இல்லவே இல்லை!

### அடித்துச் சொல்கிறார் மைத்திரி

கொழும்பு, நவ.17

“இலங்கையில் இப்போது எந்தவொரு இரகசிய முகாமும் இல்லை. இரகசிய முகாம்களில் எவரும் தடுத்து வைக்கப்படடிருக்கவுமில்லை” எனக் கைவிரித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 06

## வாள்வெட்டு எதிரொலி:

## இன்னும் இறுகும் பொலிஸ் சோதனை

### நீதிபதி இளஞ்செழியனிடம் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

“யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக அதிரித்துள்ள வாள்வெட்டுக் கும்பல்களை அடக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் பணியாற்றும் சகல பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் பொலிஸார் சுற்றுக்காவலிலும், சோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். சோதனை நடவடிக்கைகள இன்னும் இறுக்கமாக்கவுள்ளோம்”

இவ்வாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனிடம் எடுத்துரைத்தார் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ.

யாழ். மேல் நீதிமன்றில், மேல் நீதிமன்ற நீதிபதிக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சட் 06

## அரியாலைக் கொலை; விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் இளைஞனைச் சுட்டுக்கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு விசேட அதிரடிப் படையினரையும் எதிர் வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் எஸ். சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது அடையாள அணிவகுப்பு 06








## உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

**உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்**

**பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்**

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்**



# மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

கொழும்பு, நவ.17

எதிர்வரும் வாரங்களில் நாட்டில் மீண்டுமொருமுறை எரிபொருள் தட்டுபாடு ஏற்படும் என்று கனிய எரிபொருள் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் டீ.ஜே. ராஜகருணா, “நாட்டில் எரிபொருள் தட்டுபாட்டைத் தவிர்க்கும் வகையில் எரிபொருளைச் சேமித்து வைக்கக்கூடிய தாங்கிகள் தேவையாகவுள்ளன. தற்போது காணப்படும் எரிபொருள் தாங்கி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய தாங்கிகள் அமைக்க வேண்டுமென்றில்லை. திருகோணமலைத் துறைமுகத்தில் காணப்படும் எரிபொருள் தாங்கிக் கூட்டுதாபனத்தை அரசு பொறுப்பேற்றால் புதிய எரிபொருள் தாங்கிகள் அமைப்பதற்கான தேவை ஏற்படாது. அங்கு காணப்படும் 10 தாங்கிகளை மீண்டும் அரசு பொறுப்பேற்பதற்கு இரண்டு தடவைகள் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவை இன்னமும் பெறப்படவில்லை. இதனால் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம்” என்றார். (அ)

## வடக்கு-கிழக்கில்

# 50, 000 வீடுகள்; அவகாசம் நீடிப்பு

கொழும்பு, நவ.17

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் 50,000 செங்கல் மற்றும் சீமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அரசு மேலும் நீடித்துள்ளது. அத்துடன் இந்த வீடுகளை அமைப்பதற்கான நியமங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல் மற்றும் சீமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான செலவானது பொருத்து வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்படும் செலவை விட அதிகமான போதிலும், பொருத்து வீடுகளுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதனால் செங்கல் மற்றும் சீமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகளைக் கையளிப்பதற்கான கால அவகாசத்தையே அரசு நவம்பர் 27 வரை நீடித்துள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கில் சில இடங்களில் செங்கற்களைப் பெற்றுக் கொள்வது சிரமம் என்பதன் காரணமாக சீமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியுள்ளது.



இந்தத்திட்டமானது பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சிக்கியது கடத்தல் மண்

வடமராட்சி, நவ.17

குடத்தனை மேற்கில் இருந்து சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த இரண்டு ஹன்டர் வாகனங்கள் பொலிஸாரிடம் நேற்றுச் சிக்கின.

குடத்தனைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் வைத்தே இந்த வாகனங்களை, சிரேஷ்ட பொலிஸ் பிரிவில் இயங்கும் போதைப் பொருள் ஒழிக்கும் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மடக்கிப் பிடித்தனர்.

இதன்போது ஒரு வாகனத்தில் இருந்த சாரதி பிடிபட்ட போதும் , மற்றைய சாரதி தப்பிச்சென்றுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

# குளம் உடைவதைத் தடுத்த கடற்படை



முல்லைத்தீவு, நவ.17

முல்லைத்தீவில் உடைப்பெடுக்கும் நிலையில் இருந்த குளத்தின் துரிசுகளைக் கடற்படையினர் துரிதமாகப் புனரமைப்பதால், வரவிருந்த பெரும் ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, குளமுறிப்பு குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதாக பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இது தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகிய நிலையில் குறித்த பகுதிக்கு இலங்கைக் கடற்படையினர் நேற்று விரைந்து வந்து, குளத்தின் அணைக் கட்டையும், துரிசையும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரின் உதவியோடு துரிதமாகப் புனரமைக்கும் நடவடிக்கையில் இறங்கினர். இந்த அவசர நடவடிக்கை மூலம் உடனடியாக வரவிருந்த ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளதாகவும், குளம் உடைப்பெடுத்திருந்தால் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (அ)

# யாழ்ப்பாணம் மூழ்காது

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல்

யாழ்ப்பாணம், நவ.17

“யாழ் .குடாநாடு கடலில் மூழ்கப் போவதாகப் பரவும் செய்தி வெறும் யூகமே” என்று யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி தெரிவித்துள்ளார்.

“விஞ்ஞான அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தீர்மானம் மேற்கொள்ளப்படும். மக்களினால் மேற்கொள்ளப்படும் அன்றாட நடவடிக்கை காரணமாகவே கடல் உள்வருகை நிகழ்கின்றது.

மேலும் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கைகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன. தற்போது கடல்நீர் 12 மீற்றர் தூரத்தில் நிலத்தை நோக்கி வருகின்றது. இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் கடலில் மூழ்கப் போவதாகப் பரவும் செய்தி நிச்சயமானது எனக் கூறமுடியாது” எனத் தெரிவித்தார். (இ)

# முன்னாள் போராளிகளுக்கு வவுனியாவில் வீட்டுத்திட்டம்

வவுனியா , நவ.17

வவுனியாவில் முன்னாள் போராளிகளுக்கு வீட்டுத்திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, கள்ளிக்குளம் சிதம்பரம் கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கிராம சக்தி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“கிராம சக்தி வேலைத்திட்டம் கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது நாடு முழுவதும் இந்த வேலைத்திட்டம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக இந்த 30 வருட யுத்தத்தில் தேங்கிய நிலை வந்து விட்டது,

இல்லாவிட்டால் சிங்கப்பூர் போல இலங்கை வந்திருக்கும். நாங்கள் இந்த நாட்டு மக்களுடன் இணைந்து அபிவிருத்தியில் பங்கெடுத்து, இந்த அரசுக்கு எங்களுடைய பங்களிப்பினை வழங்கி வறுமை நிலையிலிருந்து மாற்றம் பெற வேண்டும்” என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# இலங்கையில் அதிசய பாம்பு



கொழும்பு, நவ.17

உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத பாம்பு இனம் ஒன்றைச் சிவனொளிபாத மலைப் பகுதியில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிவனொளிபாத மலையின் மேற்கு மலையடிவாரத்தில் இந்தப் பாம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாம்பு தொடர்பான கண்டுபிடிப்பை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகையான சூடாஸ்கா தனது பதிப்பிலும் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

கண் கொத்திப் பாம்பு இன வர்க்கத்தைச் சேர்ந்த இந்தப் பாம்பு இலங்கைக்கே உரித்தான இனமாகும். இந்தக் கண்டுபிடிப்புடன் இலங்கைக்கே உரிய 51 பாம்பு இனங்களின் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 104 வகை பாம்பு இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கடன்கார வர்த்தகர் கம்பி நீட்டினார்



வவுனியா , நவ.17

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரும் நிதி மோசடியில் ஈடுபட்ட வர்த்தகர் தலைமறைவாகியுள்ளாரென வவுனியா மற்றும் மன்னார் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் நகைக் கடை வைத்துத் தொழில் புரிந்து வந்த ஒருவர் அண்மைக் காலமாக வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள வர்த்தகர்களிடம் 5 கோடி ரூபாவுக்கும் அதிகமாகக் கடன் வாங்கியுள்ளார். அத்துடன் வங்கிகளிலும் கடன்களைப் பெற்றுக் கொண்ட இவர், தற்போது குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

# கடற்படைப் பேச்சாளரை சிறைக்கு மாற்றுக!



கொழும்பு, நவ.17

இலங்கைக் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்கவை, கடற்படை மருத்துவமனையில் இருந்து வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றுமாறு கொழும்பு கோட்டே நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொமடோர் டி.கே.பி. தசநாயக்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாக வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், அவர் வெலிசறை கடற்படை மருத்துவமனையில் இருந்து வருகிறார்.

ஆயினும், ஒரு விளக்கமறியல் கைதிக்குரிய வழக்கமான நடைமுறைகளுக்கு மாறாக, கடற்படை மருத்துவமனையில் சிறப்பு வசதிகளுடன் அவர் தங்கியிருப்பதாக செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே அவரை உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 17 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# மைத்திரி வேறு மகிந்த வேறல்ல

நேற்றும் ஒரு கனவு கலைந்து போனது.

தங்களுடைய பிள்ளைகளினதும், உறவுகளினதும் கதி என்ன என்பதை, நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக வெளிப் படுத்துவார் அல்லது அதற்காக ஒரு கால அவகாச உறுதி மொழியையாவது வழங்குவார் என்றே காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் கனவு கண்டிருந்தனர். மெல்லிய முறுவலோடும், 'மிஸ்டர் சிம்பிள்' என்ற அடைமொழியோடும், நல்லாட்சி நாயகனாக வலம் வந்து கொண்டிருந்த ஜனா திபதி, தங்கள் விடயத்திலும் கரிசனையோடு நடந்து கொள்வார் என அவர்கள் எதிர்பார்த்ததில் தவறொன்று மில்லையே.

கிட்டத்தட்ட 9 மாதங்களாகப் போராடிக் கொண்டிருப்ப வர்களை, வாக்குறுதியளித்ததை விடவும் இரு மணிநேரம் தாமதமாகவே வந்து சந்தித்திருக்கிறார் ஜனாதிபதி. ஏனெ னில் அவருக்கு அதைவிடவும் அவசரமான வேலை காலி முகத்திடலில் காத்திருந்தது. சீனாவின் 'ஷங்கரி–லா' ஹோட்டலைத் திறந்து வைத்து, சீன டிராகன் நடனத்தை ரசித்து, ஒரு கோப்பைத் தேநீரை அருந்தியபடி, ஹோட்டலின் 32 ஆவது மாடியில் இருந்தபடி, இலங்கையை ரசிக்கையில் எப்படி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீர் முகம் ஜனாதிபதிக்கு வந்திருக்க முடியும்?

அத்துடன் வந்ததும் வராததுமாக , முகத்தில் அடித்ததைப் போல "யாரும் மூன்று பேர் மட்டும் பேசுங்கள். எனக்கு நேரம் இல்லை" என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு அவரைச் சந்திக்க எப்படியெல்லாம் அலைந்து இந்தச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டோம் என்று காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகள் சொன்ன பின்னரே அரை மனதோடு, இரண்டு மணித்தியாலங்களை ஒதுக்கியுள்ளார் ஜனாதிபதி. அத்தோடு, தான் மனதில் வைத்திருந்த காணா மல் போனோருக்கான அலுவலகம் பற்றிய எண்ணத்தை வந்தவர்களிடம் திணிக்க ஜனாதிபதி எண்ணினாரே தவிர, அவர்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்கவோ, காணா மல் போனோரை எப்படிக் கண்டுபிடிப்பதெனச் சிந்திக்கவோ கிஞ்சித்தும் அவர் விரும்பவில்லை. அதனால் தான் ஒருகட் டத்தில், மொழிபெயர்ப்புக் கருவியுடன் கூடிய,'ஹெட் போனை' கழற்றியெறிந்து விட்டு, தன் அலட்சியப் போக்கை மறைமுகமாக உணர்த்த முயன்றுள்ளார்.

வராமல் வந்த வரமாக அரிதாகக் கிடைத்த ஜனாதிப தியுடனான சந்திப்பில் என்னென்னவோ விடயங்களை யெல்லாம் வெளிப்படுத்த காணாமல் போனோரின் உறவு கள் எண்ணியிருந்தனர். ஆனால் மைத்திரியின் அலட்சிய மும், கண்டுகொள்ளாத்தனமும் அந்த எண்ணத்தை அடியோடு அழித்துவிட்டது. எனினும் ஒரேயொரு விடயத்தை அவரின் காதில் போட்டுவைத்தனர். அது, இரகசிய வதை முகாம்கள் பற்றியது. ஆனால் அதற்கும் மைத்திரி இளகவில்லை.

"அப்படி எந்தவொரு இரகசியமுகாமும் இங்கில்லை. சும்மா கற்பனையை அவிழ்த்து விடாதீர்கள். அப்படி எங் காவது இரகசிய வதை முகாம் இருந்தால் காட்டுங்கள். நானும் வந்து பார்க்கிறேன். இல்லாவிட்டால் ஐ.நாவை அழைத்து வந்து காட்டுங்கள்" என்று கோபமும், நக்கலுமாகச் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லும் போது, அவரது வார்த்தைக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் வார்த்தைகளுக்கும் அவ்வளவு பெரிதாக எந்த வித்தியாசமும் இருக்கவில்லை எனவும், மைத்திரி ரூபத்தில் மகிந்த தான் தங்களோடு கதைக்கிறாரோ என்று எண்ண வேண்டியிருந்ததாகவும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் ஒருவர் தெரிவித்திருந்தார். அவர் நினைத்தது உண்மைதான். கழுத்தில் சிவப்புச் சால்வையும் மீசையும் வைத்திருந்தால் தான் மகிந்த என்றில்லை. வெள்ளைச் சட்டை அணிந்து, இன் முறுவலோடும் வருகின்ற மைத்திரியின் உள்ளேயும் ஒரு மகிந்த ஒளிந்தே இருக்கிறார். அதைக் கஷ்டப்பட்டு, 'எளிமை' என்ற போர்வையால் மூடியிருந்தவர், நேற்று அதைக் களைந்துவிட்டு, சொந்த முகத்தோடு பேசியிருக் கிறார். மகாவம்சக் கனவை விழுங்கிய பேரினவாதிகள் எல்லோருக்குள்ளும் ஒரு மகிந்த வாழ்ந்து கொண்டி ருக்கிறார்.

இத்தனை நாளும் மைத்திரியோடு பேசினால் ஏதும் நடக்கும் என்று நம்பியிருந்தவர்களின் நம்பிக்கை நேற் றோடு தொலைந்துவிட்டது. இனி அவர்கள் தொடர்ந்தும் போராட வேண்டும். தீர்வு கிடைக்குமா இல்லையா என் பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் தாங்கள் போராடி, ஏதேனும் சிறு ஒளிக்கீற்றாவது தென்படாதா என்ற நப்பாசை, இந்த ஏதிலிகளை இலக்கற்ற வெளியில் தள்ளி, போராடச் செய்து கொண்டே இருக்கும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# போர் முடிந்து போனாலும் போர்ச்சூழல் தொடர்கிறது

## அமைச்சர் அனந்தி ஆதங்கம்



"இலங்கை அரசாங்கத்தினால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள் ளப்பட்டுவந்த போர் முடிவடைந் தாலும் போர்க்காலச் சூழல் இன்றும் தொடரவே செய்கின்றது" இவ்வாறு தெரிவித்துள்ளார் வட மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன். வட மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பாலத் தடி பெரியகடை பகுதியில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நேற்று முன் தினம் புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"யுத்தம் முடிவடைந்து ஒன்பது வருடங்கள் கடந்த பிற்பாடும் மன்னார் நகரப்பகுதியைப் பார்க்கின்ற பொழுது இப்பொழுதும் யுத்தத்திற்குள் இருக் கின்றதான சூழலைப் போன்றே காணப் படுகின்றது. நகர அபிவிருத்தி என்பது மன்னார் மாவட்ட மக்களைப் பொறுத் தவரையில் இன்னும் பல வருடங்கள் செல்லலாம்.

திட்டமிடப்பட்ட வகையில் யுத் தத்தை நடத்திவிட்டு தொடர்ந்தும் யுத்த சூழலில் இருக்கு ஒரு நிலையை தமிழர் பகுதிகளில் ஏற்படுத்தியே இந்த அரசு சென்றுகொண்டிருக்கின்றது. ஏ-9 வீதியால் செல்லும் போது கிளி நொச்சி பகுதியை பார்த்தோமேயா னால் மிகவும் அபிவிருத்தியை கண்ட இடமாக காட்சியளிக்கிறது. ஆனால் கிராமங்களுக்குள் இறங்குகின்ற போது வீதிகளில் இருந்து மக்களுடைய வாழ்வாதாரம் என எல்லாமே பூச்சிய மான நிலையில்தான் இருக்கின்றது.

வடமாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் தொழில்துறை தொடர்பான பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்காமை பெரும் பின்னடைவாக உள்ளது. எங்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கின்றது.

எங்களுக்கென்று சுய பொருளாதா ரத்தையும் சுய சந்தைகளை உருவாக் குவதன் ஊடாகத்தான் இவ்வாறான அரசினுடைய காலைப்பிடிக்காமல் நாங்கள் நாங்களாகவே இருக்கக்கூடியதான பொருளாதாரத்தை கட்டியெழுப்பு வோம் என்று நம்புகின்றோம்." என்றும் அவர் தெரிவித்தார்.

(அ)



# உதவி செய்ய உதவுங்கள்

## வடமாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

வடமராட்சி, நவ.17

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வாழ்வாதரம் குறைந்த நிலையில் வாழும் குடும் பங்களைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு துவிச் சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பருத்தித் துறை பிரதேச செயலகத் தில், பிரதேச செயலர் ஆழ் வார்பிள்ளை தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடை பெற்றது.

இதன்போது, வட மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து கலந்துகொண்டு மாணவர் களுக்கான துவிச்சக்கரவண் டிகளை வழங்கி வைத்தார்.

"கஷ்டப்படும் குடும்பங் களின் வாழ்வாதாரத்தின் தேவைகளை நிறைவு செய்ய கட்சி பேதம் இன்றி உங் கள் உதவியினைக் கேட்டு நிற்கின்றேன். எனக்கு நீங் கள் அறியத் தருவதன் மூலம் இலகுவில் அவர்களுக்கான உதவிகளை நான் செய்து கொடுக்க முடியும்" என வடமாகாண சபை உறுப் பினர் அகிலதாஸ் இதன் போது தெரிவித்தார்.(அ)

# பாலியல் சித்திரவதை: அமெரிக்கா அக்கறை

கொழும்பு,நவ.17

அப்பாவி இளைஞர்கள் மீது இப்போது இலங்கை இராணுவத்தினர் மேற் கொண்டுவரும் பாலியல் சித்திரவதைகளில் ஈடுபட் டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரியுள்ளது.

அண்மையில் அசோசி யேட் பிரஸ் ஊடகம் வெளியிட்ட சித்திரவதை பற்றிய அறிக்கை குறித்து அமெரிக்கத் திணைக்களத் தின் பேச்சாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

" இலங்கைப் பாதுகாப் புப் படையினர் மீது சுமத் தப்பட்டுள்ள சித்திரவதை மற்றும் பாலியல் வதைக் குற்றச்சாட்டுகள் தொடர் பாக அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. இவ்வா றான மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் " என்று அவர் தெரிவித்தார்.(அ)

# மழை வெள்ளத்தை கடலில் விட முடியாது

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்ப்பாணத்தில் தேங் கியிருக்கும் வெள்ள நீரை உடனடியாகக் கடலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட் டாது என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்து வப் பிரிவின் உதவிப் பணிப் பாளர் எஸ்.ரவி தெரிவித் துள்ளார்.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் கொட்டித் தீர்த்த மழையால் பல இடங் களில் வெள்ள அபாயம் ஏற்பட்டிருந்தது. இதனால் தேங்கியிருக்கும் மழை நீரை கடலுக்குள் செல்ல, நடவடிக்கை எடுப்பதன் மூலம் வெள்ளப்பிரச்சி னைக்கு தீர்வு காணுமாறு கோரப்பட்டிருந்தது. இதற்கே அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் உத விப்பணிப்பாளர் மேற்ண்ட வாறு பதிலளித்துள்ளார்.

"யாழ். மாவட்டத்தில் தொடர் மழையால் வெள்ள நிலைமை ஏற்பட்டிருந்தது. அத்துடன் சில பகுதிகளில் நேற்றுமுன்தினமும் மழை பெய்தமையால் வெள்ளம் இன்னும் வடிந்தோடாமல் தேங்கியுள்ளது. ஆயினும் குறித்த வெள்ளத்தை உடன டியாகக் கடலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் படமாட்டாது. குடிநீர் மற் றும் விவசாய நடவடிக்கை களைக் கருத்தில் கொண்டே குறித்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மழை நீரின் மூலமே குடிநீர் மற் றும் விவசாயத் தேவை களைப் பூர்த்தி செய்கின் றது.கடந்த வருடத்தில் குறிப்பிட்ட அளவில் மழை வீழ்ச்சி இல்லாமையால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தனர். இங்குள்ள அணைக் கத வுகள் மூடப்பட்டமையும் ,

சட்டத்துக்கு முரணான கட்டடங்களுமே வெள்ள நீர் வடிவதில் தாமதம் ஏற்பட்டமைக்கு உண்மையான காரணங் களாகும்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# சித்திரவதைகள் நடக்கவேயில்லை

## சத்தியம் செய்யும் வைத்தியரத்ன

கொழும்பு,நவ.17

தமிழ் இளைஞர்கள் மீது பாலியல் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன நிரா கரித்துள்ளார்.

"இது ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோருவதற் காகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட் டுகள் ஆதாரமற்றவை.பாலியல் மீறல்கள் விடயத்தில், இலங்கை அரசு சகிப்புத் தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதோடு இது குறித்த விசாரணைகளும் முடிந்துவிட்டது.குற்றச்சாட்டுகள் இருந்தால் அரசு சுதந்திரமான விசாரணையை வரவேற்கும்" என அவர் தெரிவித்தார். (இ)

# இன்று நாளும் கோளும்

17.11.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 30 ஆம் நாள்

திரயோதஷி பி.ப. 03.34 மணி வரை | சித்திரை பி.ப. 05.02 மணி வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 01.30 – 03.00 | சுபநேரம் 10.45 – 11.15 | எமகண்டம் 06.00 – 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறுமை | ஜெயம் | சாந்தி | போட்டி | கீர்த்தி | யோகம் | உற்சாகம் | அச்சம் | ஆரோக்கியம் | தாமதம் | தோல்வி | கவனம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தாய் உயிரிழப்பு

## மரணத்தில் சந்தேகம்

**- கணவன்**

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட இளந்தாயின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது கணவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய குருபரன் பிரசாந்தி என்ற இளந்தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார். அவரது மரணத்திலேயே தனக்குச் சந்தேகம் இருப்பதாகக் கணவன் தெரிவித்துள்ளார்.

"எனது மனைவியை இரண்டாவது பிரசவத்துக்காக கடந்த 12 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தேன்.

அதன் பின்னர் 13 ஆம் திகதி பிரசவம் இடம்பெற்று தாயும் , குழந்தையும் நலமாகவே காணப்பட்டனர். உணவு உட்கொண்டு தேக ஆரோக்கியத்துடன் என்னுடன் கதைத்துப் பேசினார்.

எனினும் நேற்று முன்தினம் இரவு திடீரென அவர் உயிரிழந்தமையானது எனக்குச் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. பொலிஸ் நிலையத்திலும், வைத்தியசாலைப் பணிப்பாளரிடமும் இது குறித்து முறைப்பாடுகள் செய்துள்ளேன்"

## இரத்தப் புற்றுநோயே காரணம்

**– யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்**

யாழ்ப்பாணம்,நவ.17

இளந்தாயும், குழந்தையும் உயிரிழந்த விடயம் குறித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் வினவியபோது, "கடந்த 12 ஆம் திகதி குறித்த தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவருக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அவர் அந்த பிரசவத்துக்காக 24 முதல் 28 வாரங்களையே கடந்திருந்தார். அதாவது 6 முதல் 7 மாதக் குழந்தையையே வயிற்றில் சுமந்திருந்தார்.

எனினும் பிரசவத்துக்கான அனைத்துத் தகுதிகளும் அவரிடம் காணப்பட்டன. தாயின் இரத்த மாதிரி பரிசோதனைக் குட்படுத்தப்பட்டது.

அதன்போது தாய்க்கு இரத்தப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அதனை அவரது கணவருக்குத் தெரியப்படுத்தினோம். இரத்தப் புற்றுநோய் காணப்பட்டமையால், இரத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவே காணப்பட்டது. எனினும் அவர் குழந்தையைப் பிரசவித்தார்.

குழந்தை ஒரு கிலோகிராமுக்கு குறைவாகவே காணப்பட்டது. குறைமாதக் குழந்தை என்பதால் நிறையும் குறைவாகவே காணப்பட்டது.

பிரசவத்தின் பின்னர் தாய்க்கு இரத்த போக்குத் தொடர்ந்து காணப்பட்டது. இரத்தத்தை உறைய வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவருக்கு இரத்தமும் தொடர்ச்சியாக ஏற்றப்பட்டது.

எனினும் இரத்தப் போக்கை நிறுத்த முடியவில்லை. இரத்தத்தில் வைரஸின் தாக்கம் அதிகரித்ததால் அவர் உயிரிழந்தார். குழந்தையும் குறித்த வைரஸினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளது" என்றார். (அ-4)



## "செக்குத்தாள்" தும்மினால் சேருமிடம் கைலாயம்?

இண்டைக்கு காலமை சந்தைக்குப் போன்னான். வாழைக் குலைப் பகுதியிலை கோபாலுவைக் கண்டன். கொஞ்ச வாழைக்குலையை வைச்சுக் கொண்டு நிக்கிறான். ஆளும் அவ்வளவு சந்தோஷமா இல்லை. பாத்திட்டு விறைச்சுப் போனன். "என்னடா நடந்தது" எண்டு கேட்டால். பதிலில்லை. கண்ணாலை பொல பொல வெண்டு கண்ணீர் வரத் துவங்கிவிட்டுது.

ஏனெண்டால் இப்ப ஐஞ்சாறு மாத்துக்கு முன்னம் சந்தைக்குப் போற வழியிலை றோட்டிலை உவனைக் கண்டனான். ஆள் முந்திச் சந்தேக்கை நிண்ட மாதிரி இல்லை. பெண்டுகள் ஓடுற மோட்ட சைக்கிள் ஒண்டிலைதான் வந்தவன். இடக் கையிலை இரண்டும் வலக் கையிலை இரண்டுமா நாலு மோதிரம். புலி நகச் சங்கிலி ஒண்டு வலு நீளமாப் போட்டுச் சேட்டுக்கு வெளியிலை எட்டிப் பாத்துக் கொண்டு நிற்க வாய் சிவக்க வெத்திலை. வலக் கையிலை ஒரு கனமான மணிக்கூடு. அது நல்ல விலையாத்தானிருக்க வேணும்.

முந்தி எண்டால் கண்டவுடனை சட்டெண்டு சைக்கிளாலை இறங்கி விடுவன். அண்டைக்குப் பாத்தால் மோட்டச் சைக்கிளாலை இறங்கவுமில்லை. மோட்டச் சைக்கிள் இஞ்சினை நிப்பாட்டவுமில்லை. ஆள் நல்லா மாறின மாதிரிக் கிடந்திது.

"அப்ப கோபால் என்ன இப்ப சந்தேக்கையும் காணேல்லை என்ன முயற்சி நடக்கிது? " எண்டு கேட்டன். "அண்ணை இவ்வளவு நாளும் வீணா அலைஞ்சதுதான் மிச்சம். இப்ப வீட்டிலை இருந்தே ஐஞ்சு பத்தைத் தேடக் கூடியதாக் கிடக்கு. பிரச்சினையும் அவ்வளவு இல்லை. முந்தி வாழைக் குலையைக் கடைக்காறரிட்டை கடனாக் குடுத்திட்டு காசை வாங்கப் போனால், ஒண்டு கடையிலை ஆளைப் பிடிக்கிறதும் கஷ்டம். அப்பிடி நிண்டாலும் பேந்து வா.. பிறகு வா எண்டு சாட்டும் சொல்லுவினம். பிறகு ஒரு மாதிரிக் கதைச்சுக் கிதைச்சுக் காசு வேண்டேக்கை அதிலையும் ஐஞ்சைப் பத்தைக் கழிப்பினம். கேட்டால் கீழாலை அழுகிப் போச்சு. மேலாலை பிரிஞ்சு போச்சுதெண்ட வியாக்கியானம் வேறை." –

எண்டவன் கையிலை இருந்த பெருங்காயப் பை ஒண்டைக் காட்டினான். அதுக்கை ஒரு பாங்கின்ரை செக்குப் புத்தகமும் ஒரு சின்னக் கொப்பியும் இருந்திது.

எனக்கு விளங்கேல்லைக் கோபால் விவரமாச் சொல்லெடா எண்டு கேட்டதுக்கு, அண்ணை மனுசீன்ரை தம்பி கொஞ்சக் காசு – ஒரு பத்து ரூபா – அனுப்பி விட்டான். நான் அதைப் பக்குவமாக் கொண்டு போய் பாங்கிலை போட்டன். கொஞ்ச நாளைக்குப் பிறகு பாங்க் மனேச்சர் வரச் சொன்னவர் எண்டு என்ரை பக்கத்து வீட்டுக்காரன் வந்து சொன்னான். போனால் மானேஜர் சொன்னார் காசை உப்பிடி வைச்சிருந்தால் உங்களுக்கு நட்டம். வேணுமெண்டால் அதுக்கெதிரா ஒரு லோன் தாறன் எடுத்துத் தொழிலைச் செய்யலாம் எண்டார்.

பிறகு தம்பீன்ரை சிநேகிதன் ஒருத்தன் பெரியகடையிலை புடவைக்கடை ஒண்டிலை மனேஜரா இருக்கிறவன் உவன் வீட்டுக்கு வந்தாப்போலை பலதையும் பத்தையும் கதைக்கேக்கை சொன்னான். "இப்ப வட்டிக்குக் காசு குடக்கிறதுதான் நல்ல யாவரம். சொலிட்டா கையிலை வரும். வீட்டை பேசாமல் இருந்து உழைக்கலாம் வேணுமெண்டால் தான் ஆக்களைத் தரலாம் எண்டான். அது தான் இப்ப அந்த யாவாரத்தைத் தான் செய்யிறன் எண்டு சொல்லிப் போட்டுப் போட்டான்.

பிறகுதான் கேள்விப்பட்டன். தொழில் துவங்கி முதல் இரண்டு மாதமும் நல்ல ஓட்டமாம். முதலாளி எண்டு பின்னாலையும்இ முன்னாலையும் ஆக்கள் திரிஞ்சபடியாம். பிறகு அவை குடுத்த செக்கு ஒண்டு இரண்டாத் தும்மத் துவங்க ஆளின்ரை காசும் போய் கடனும் கட்டேலாமை பாங்க் மனேஜர் போட்ட காசை வெட்டி லோனை முடிச்சுப்போட்டாராம்.

பிறகு காசு குடுக்கக் காட்டின தம்பியாற்றை சிநேகிதனிட்டைப் போய் கேட்டால் "அண்ணை என்ன நான் எடுத்தனானோ? நீங்கள் தானே நேரை குடுத்தனியள். நான் என்ன செய்யிறதெண்டு சொல்லி" அவன் கடையையும் மாறி வவுனியாவுக்குப் போட்டானாம். அவனும் கொஞ்சம் கோபாலுவிட்டை விளையாடினதாக் கேள்வி.

இப்ப கோபாலு திரும்பவும் நீர் வேலிக்குப் போய் வாழைக் குலையள் வேண்டி வந்து யாவாரத்தைச் செய்யிறான். கைகால் கழுத்திலை இருந்தது ஒண்டையும் காணேல்லை. மனுசியின்ரை தாலிக்கொடியும் அடைவாம். பாவம் தான். நல்ல காலம் கோபாலு நஞ்சைக் கிஞ்சைக் குடிக்கேல்லை!

**- வில்லங்கம் விநாசி**

## குப்பைமேட்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில்




கொழும்பு, நவ.17

மீத்தொட்டமுல்லை குப்பை மேடு சரிந்ததில் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்றது.

'மெத்சரண' புலமைப்பரிசில் எனும் இந்த நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

'பிள்ளைகளைப் பாதுகாப்போம்' தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவியாக நகர, திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சு, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஏ.ஐ.ஏ லங்கா காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையில் இந்தப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் 107 புலமைப்பரிசில்கள் இதன் போது வழங்கப்பட்டன. (இ)

## இந்தோனேசியத் தூதுவர் சந்திப்பு

கொழும்பு, நவ.17

இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் குஷ்தி குரா அர்தியஜ் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவைச் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதிலே இந்தோனேசியத் தூதுவர் அர்தியஜ் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விஜேவர்தன ஆகியோருக்கிடையில் சிநேக பூர்வக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன. (இ)

## நியமனமும் வேண்டும்! நீதியும் வேண்டும்!

### பணி உதவியாளர்கள் சத்தியாக்கிரகப் போர்



யாழ்ப்பாணம்,நவ.17

வட மாகாண சுகாதாரப் பணி உதவியாளர்கள் யாழ். கைதடியிலுள்ள வட மாகாண முதலமைச்சர் அலுவலகம் முன்பாக நீதி மற்றும் நிரந்தர நியமனம்கோரி காலவரையறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு தலா 25 பணி உதவியாளர்கள் வீதமும், வவுனியா மாவட்டத்திற்கு 27 பணி உதவியாளர்களும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட 127 சுகாதாரப் பணி உதவியாளர்களே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாக தெரிவித்த சுகாதாரப் பணியாளர்கள், "2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நாங்கள் சுகாதாரப் பணி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டோம்.

அதன்போது நிரந்தர நியமனம் வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அப்போது இரண்டு வார கால அவகாசம் கேட்டிருந்தார். இப்போது அவரும் இல்லை .

முதலமைச்சரிடம் சென்றோம். அவரும் இரண்டு வாரத்தினுள் உங்களுக்குரிய சம்பளங்கள் உரிய இடங்களில் வழங்கப்படும் என்றார். இதுவரை அதுவும் வழங்கப்படவில்லை.

அதற்குப் பதிலாக இம்மாதம் 11 ஆம் திகதியிலிருந்து நாங்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுவதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எங்களை விரைவில் நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்கி எமது நிலுவைச் சம்பளத்தை வழங்க வேண்டும். அது வரை எமது போராட்டம் தொடரும்" என்றனர். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வே சதி: ஏன் எதற்கு எப்படி?

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில், இராணுவம் அரச கட்டடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஆனாலும் "அது சதிப்புரட்சி இல்லையாம்!" என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். 93 வயதான ஜனாதிபதி முகாபேயும், அவரது குடும்பத்தினரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சமீப காலங்களில் முகாபே சுகயீனமுற்று இருந்த படியால், தேசத்தின் உண்மையான நிர்வாகத்தை அவரது 52 வயதான மனைவி கிரேஸ் தான் கவனித்து வந்தார். முகாபே குடும்பத்தினர் முன்னிலைப் படுத்தப்பட்டதற்கு ஆளும் 'ஸனு–பி.எப்' கட்சிக்குள் அதிருப்தி இருந்ததையும் மறுக்க முடியாது.

கடந்த சில வாரங்களாக, சிம்பாப்வே ஆளும் கட்சிக்குள் களையெடுப்புகள் நடந்து வந்தன. "களையெடுப்புத் தொடர்ந்தால் இராணுவ சதிப்புரட்சி நடக்கும்" என்று ஒரு இராணுவ ஜெனரல் கடந்த செவ்வாய்க்கிழமைதான் எச்சரித்து இருந்தார். அப்படி எச்சரித்து அடுத்த நாளே நடந்துள்ள சதிப்புரட்சிக்கு பின்னால் யார் இருந்தார்கள் என்பதை ஊகித்தறிவது கடினமான விடயம் அல்ல.

கடந்த திங்கட்கிழமை தான், துணை அதிபர் எமர்சன் பதவி விலக்கப்பட்டார். "அதிபர் பதவியைக் கைப்பற்ற சூனியம் செய்ததாக" முகாபே அவர் மீது குற்றம் சாட்டி இருந்தார். (ஆபிரிக்காவில் இன்றும் பல மக்கள் சூனியம் செய்வதை உண்மை என்று நம்புகிறார்கள்.) ஆகவே, துணை அதிபர் எமர்சன் "எனக்குப் பாதுகாப்பு இல்லை" என்று கூறி, அன்றைய தினமே நாட்டை விட்டு வெளியேறி இருந்தார்.

சதிப்புரட்சி நடந்த தினமான புதன்கிழமையே, பதவியிறக்கப்பட்ட முன்னாள் துணை ஜனாதிபதி எமர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கி உள்ளார். அவரே சிம்பாப்வே ஆட்சியை பொறுப்பேற்று நடத்துவார் என ஊகிக்கப்படுகின்றது. "முகாபேயின் சர்வாதிகாரம் ஒழிந்தது" என்று மகிழ்ச்சி தெரிவிப்போர் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

இதே எமர்சன் தான் முகாபேயின் இரும்புக் கரமாகச் செயற்பட்டவர். பிரிட்டன் காலனிய ஆட்சிக்கு எதிராக நடந்த விடுதலைப் போராட்டத்தின் போது, எமர்சன் முகாபேயின் நம்பிக்கைக்குரிய தோழராக இருந்தவர். சுதந்திர சிம்பாப்வே அரசில் எமர்சன் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் தான், 1983 ம் ஆண்டு, 'நிதேபெலே' இனப்படுகொலை





நடந்தது.

சிம்பாப்வே தெற்கில் வாழும் நிதேபெலே மொழி பேசும் சிறுபான்மை இனத்தவர்கள், பெரும்பான்மை மொழியான ஷோனா பேசும் முகாபே அரசுக்கு அச்சுறுத்தலாக இருந்தனர். இது இரண்டு மொழிகளைப் பேசும் மக்களுக்கு இடையிலான இனப்பிரச்சினையாகவும் இருந்தபடியால், அரச பயங்கரவாத நடவடிக்கை மூலமே அந்த மக்களைப் பணிய வைக்க முடிந்தது.

அப்போது குறைந்தது இருபதாயிரம் நிதேபெலே மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். இராணுவத்தின் ஐந்தாவது படைப்பிரிவான, 'குகுரஹண்டி' என்ற பெயர் தாங்கிய சிறப்புப் படையணியினரே படுகொலைகளில் ஈடுபட்டனர். ஷோனா மொழியில் குகுரஹன்டி என்றால் "குப்பைகளை ஒதுக்கும் மழை" என்று அர்த்தம். இதுவே அன்றைய இனப்பிரச்சினையின் தீவிரத் தன்மையை புரிய வைக்கப் போதுமானது.

சிம்பாப்வேயில் நடந்த இராணுவ சதிப்புரட்சியை, மேற்கத்திய நாடுகளும், அவற்றின் அடிவருடிகளும் ஆதரிப்பதாகத் தெரிகின்றது. பதவியிறக்கப்பட்ட ஜனாதிபதி றொபேர்ட் முகாபே, அங்கு நடந்த பொதுத் தேர்தல்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். ஆனால், மேற்குலகம் முகாபேயை ஒரு "சர்வாதிகாரி" என்று சொல்கிறது! அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளருக்கு, மேற்குலகம் தாராளமாக உதவிய போதிலும் தேர்தலில் வெல்ல முடியவில்லை.

மேற்குலகின் பார்வையில் "சிம்பாப்வே மக்களால் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியை அகற்றி விட்டு, சதிப்புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியுள்ள இனப்படுகொலையாளி" சிறந்த நண்பராக தெரிகிறார். ஆட்சியில் இருப்பது சர்வாதிகாரி, இனப்படுகொலையாளியாராக இருந்தாலும், மேற்குலக பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்பட்டால் சரி தானே?

சிம்பாப்வே நாட்டில் ஆயிரக் கணக்கான ஆங்கிலேய, டச்சு "விவசாயிகள்" வாழ்கிறார்கள். காலனிய காலத்தில் குடியேறிய அவர்களை விவசாய– தொழில் அதிபர்கள் என்று அழைப்பது தான் முறையானது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களை சொந்தமாக வைத்திருந்து, அவற்றில் புகையிலைப் பயிர் செய்து மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். பதினேழு வருடங்களுக்கு முன்னர், "முன்னாள் விடுதலைப் போராளிகள்" வெள்ளையரின் நிலங்களை வன்முறை மூலம் பறித்து வந்தனர்.

தற்போது பதவியிறக்கப்பட்டுள்ள றொபேர்ட் முகாபேயும் முன்னாள் போராளிகளின் நடவடிக்கையை ஆதரித்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த மேற்குலக நாடுகள் சிம்பாப்வேக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டு வந்தன. குறிப்பாக, அந்த நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளான புகையிலையை வாங்க மறுத்து வந்தன. அதனால், சிம்பாப்வே பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் சென்றது. அதன் பணம் மதிப்பிறங்கி செல்லாக் காசாகியது. இதனால் அந்நிய நாணயங்களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இராணுவ சதிப்புரட்சியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. முகாபேயின் மனைவியும் அரசியல் வாரிசுமான கிரேஸ் முகாபேயின் ஆதரவாளர்கள் வேட்டையாடப்படுகின்றனர். அதைத் தவிர நிலைமை சுமுகமாக உள்ளது. பொது மக்கள் தமது அன்றாடக் கடமைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம், அங்கு நடந்த சதிப்புரட்சிக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்பதையும் மக்கள் உணர்த்தி உள்ளனர்.

● கலையரசன்

## அந்த நாள் ஞாபகம்.....!



### 17.11.1918

யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.

# கடலரிப்பில் மூழ்கவிடாமல் நெடுந்தீவைக் காப்பாற்றுக



யாழ்ப்பாணம், நவ.17

"வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் தீவுப் பகுதிகள்- குறிப்பாக நெடுந்தீவு -கடலரிப்புக்கு உட்பட்டு வருகின்றது. அதே நேரம், வடக்கின் பல பகுதிகள் உவர் நீர் உட்புகுதலுக்கும் உள்ளாகியுள்ளன. எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் அவசியமானதும் அவசரமானதுமாகும்" என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

"ஒலுவில் பகுதி கடலரிப்புத் தொடர்பில் நான் ஏற்கனவே இச் சபையின் ஊடாக அரசின் அவதானத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். உடனடித் தீர்வுகள் எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் ஒன்றுமே நடந்தபாடில்லை.

மேலும், மர அணில், மீன்பிடிக்கும் பூனை, அளுங்கு போன்ற அழிவடையும் நிலையிலுள்ள உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பில் வரவு - செலவுத் திட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, தற்போது பெரும் அழிவு நிலைக்கு உட்பட்டு வருகின்ற, வரலாற்றுச் சின்னமான நெடுந்தீவுக் குதிரைகளையும் காப்பாற்ற வேண்டியுள்ளதை இந்த அரசு மறந்துவிடக்கூடாது.

யாழ்ப்பாணத்துக்கு நவீன பொருளாதார மையம், கிளிநொச்சிக்கு பண்டகசாலை போன்ற திட்டங்கள் வரவேற்கத்தக்கவை. எனினும் வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேர்ந்த கதி இவற்றுக்கும் நேர்ந்துவிடக் கூடாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# அத்துமீறிய மீனவர்கள் 10 பேருக்கும் மறியல்



யாழ்ப்பாணம், நவ.17

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்களையும் நவம்பர் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் நாகைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர் பருத்தித்துறைக்கு வடக்கே 13 கடல்மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை ரோந்துப்பணிகளில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை கடற்படையினரால் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களின் இரண்டு இழுவைப் படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கைதான மீனவர்கள், யாழ். கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போதே இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஷங்கரி-லா’வை திறந்தார் மைத்திரி



கொழும்பு, நவ.17

இலங்கையிலேயே மிகவும் பிரமாண்டமான ஹோட்டலான ‘ஷங்கரி-லா’ வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திறந்து வைத்தார். இலங்கை வரும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் வசதிகளை மேலும் அதிகரிக்கும் வகையில் இந்தக் ஹோட்டல் சீன நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலை திறந்து வைத்த ஜனாதிபதி விசேட விருந்தினர்கள் புத்தகத்தில் கையொப்பமிட்டுள்ளார். அதன் பின்னர் 32 மாடிக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கிருந்து கொழும்பின் அழகை ரசித்தார்.(அ)

# வீதியால் சென்ற சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்வு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, நவ.17

வீதியால் சென்று கொண்டிருந்த 16 வயதுச் சிறுமியை காமுகர்கள் வன்புணர்ந்ததால், சிறுமி தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

வவுனியா கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமி , கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு கணேசபுரம் மரக்காரம்பளையிலுள்ள தனது வீட்டுக்குத் தனியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது ஓட்டோவில் வந்த இரு இளைஞர்கள் சிறுமியை வலுக்கட்டாய மாக ஏற்றிக்கொண்டு சென்று வன்புணர்ந்துவிட்டு, தப்பிச் சென்றனர். இதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் குறித்த சிறுமியின் உறவினர்கள் இது தொடர்பான முறைப்பாட்டினை நேற்று முன் தினம் மேற்கொண்டிருந்தனர்.

இதையடுத்து மனமுடைந்த நிலையில் குறித்த சிறுமி அலரி விதையை அரைத்து உண்டு தற்கொலை செய்வதற்கு முயன்றுள்ளார். எனினும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் அப்பகுதியைச் சேர்ந்த 19, 20வயதுடைய இரு இளைஞர்களை சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரணிலுக்கு விசாரணை: 20 ஆம் திகதி அழைப்பு

கொழும்பு, நவ.17

பிணை முறி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முன்னிலையாகுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இந்த விசாரணையை எதிர்கொள்ளச் செல்லும் போது பிரதமர் என்ற பதவி நிலையில் செல்லாமல் சாதாரணமாகச் செல்லவே ரணில் விரும்புவதாகவும், இதனால் தனது பதவியைத் துறந்து தற்காலிக பிரதமராக மங்கள சமரவீரவை நியமிக்க இருப்பதாகவும் பரவலாகக் கூறப்படுகின்றது. இதனால் அடுத்து வரும் நாட்கள் கொழும்பு அரசியலில் பெரும் திருப்புமுனைகளை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# பிணைமுறி உரையாடல்கள் தொலைபேசியில் சிக்கின

கொழும்பு, நவ.17

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் மற்றும் பர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனவுக்கு இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல்கள் வெளிவந்துள்ளன.

குறித்த தரவுகள் சர்ச்சைக்குரிய பிணைமுறிச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 7 தொலைபேசி உரையாடல்களும், 7 குறுந்தகவல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் துணை ஆய்வாளர் யசந்த ஜயசிங்க, பிணை முறி விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

அர்ஜூன் அலோசியஸின் கைத்தொலைபேசியில் இருந்த குறித்த தரவுகள் நீக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தொடர்ச்சிகள்

## கிணற்றுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.இதன்போதே குறித்த கிணற்றில் இருந்து சில கல்லறைகளின் மேற்பகுதிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாவீரர் துயிலுமில்லத்தை இடித்த படையினர் இந்தக் கல்லறைகளைக் கிணற்றில் போட்டிருக்கலாம் என பொதுமக்கள் தெரிவித்தனர். (அ)

## இன்னும் இறுகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமா அதிபரின் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதி அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னான்டோ , யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது, “சட்டம் ஒழுங்குக்கு அச்சுறுத்தலாகவுள்ள வாள்வெட்டு கலாசாரத்தை கட்டுப்படுத்குள் கொண்டு வரும் வகையில் பொலிஸ் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பயன்படுத்தவேண்டும் சமூகத்தவர்களுக்கு அச்சுறுத்தலான வாள்வெட்டு தாக்குதலில் ஈடுபடுவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டார் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்.

இதற்கு பதிலளிக்கும் போதே வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

வாள்வெட்டு தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்கக் கோரும் பிணை மனு யாழ். மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

“யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு குழுமோதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்தும் - அச்சத்திலும் உள்ளது.

இவ்வாறான நிலையில் கைக்குண்டு வைத்திருந்ததோடு வாள்வெட்டு போன்ற சம்பவங்களிலும் ஈடுபட்ட நபருக்கு பிணை வழங்குவது சமூகத்தின் பாதுகாப்பை மேலும் கேள்விக்குள்ளாகிவிடும்”என அரச சட்டவாதி குறிப்பிட்டு பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து நீதிபதி குறித்த பிணை மனுவிசாரணையை ஒத்திவைத்தார். இதனையடுத்தே வாள்வெட்டுக் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவரும் வழிவகைகளை ஆராயவென மேல்நீதிமன்றில் நேற்றுச் சந்திப்பு நடந்ததாகக் கூறப்படுகின்றது.(அ)

## இரகசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“ இங்கு எந்தவொரு இரகசிய முகாமும் இல்லை. அப்படி இருந்தால் எனக்கு காட்டுங்கள். நானும் உங்களோடு வருகிறேன். என்னில் நம்பிக்கை இல்லாவிட்டால், ஐ.நாவை அழைத்து வந்து, அந்த இரகசிய முகாம் எங்குள்ளது எனக் காட்டுங்கள். அதற்கு நான் தடை போட மாட்டேன்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்குள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க நான் எப்போதும் தயார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக புதிய விண்ணப்பமொன்றை மாவட்ட செயலகங்கள் ஊடாக விநியோகிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன். அவற்றை எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சேகரித்து, அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் பணித்துள்ளேன். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆணைக்குழு என்பனவற்றின் ஊடாக மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தவுள்ளேன்” என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ)

## அரியாலைக் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றிருந்தது. இதன் போது சந்தேக நபர்களை அடையாளம் காட்டவென , குறித்த படுகொலைச் சம்பவத்தின் போது கொலையுண்டவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றவரான நிஷாந்தன் என்பவர் அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் அடையாள அணிவகுப்பில் சாட்சியாளரான நிஷாந்தன், சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட்டவில்லை.

இதைத் தொடந்து, சந்தேக நபர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி இருவருக்கும் பிணை கோரி விண்ணப்பம் செய்திருந்தார்.

எனினும் இவ் வழக்குத் தொடர்பான விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாகவும், சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட [illegible] இரசாயனப் பகு[illegible] அனு[illegible]ள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (அ)

## மகிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

“ ஆட்சியில் இருந்த போது மகிந்த ராஜபக்ச இணங்கிக் கொண்டதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணவில்லை. இதன் காரணமாகவே மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ மக்கள் தெரிவு செய்யவில்லை. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகவும், ரணில் விக்ரமசிங்கவை பிரதமராகவும் மக்கள் தெரிவு செய்தனர். இரண்டு பிரதான கட்சிகள் நாட்டில் ஆட்சி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

எனவே, மகிந்த ராஜபக்ச இணங்கிக் கொண்ட யோசனைகளின் அடிப்படையிலேயே, புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் வகையிலும், ஒன்றுபட்ட மக்களாகப் பிரிக்கப்படாத நாடொன்றுக்குள் வாழ்வதற்காகவும் , புதிய அரசியலமைப்புக்கு மகிந்த ராஜபக்ச ஆதரவளிக்க வேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனால் ஆட்சியைப் பிடிப்பதற்கான வழியாக புதிய அரசியல் அமைப்பைப் பயன்படுத்த வேண்டாம் ” என இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.(அ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, சந்திப்பு நேரத்தை 2 மணித்தியாலங்களாக நீடித்தார். இருப்பினும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளைச் செவிமடுப்பதை விடவும் , காணாமல் போனோருக்கான அலுவலகம் பற்றியே பிரஸ்தாபித்தார். ஒரு கட்டத்தில் மொழிபெயர்ப்பு ஒலிவாங்கியைக் கழற்றிவிட்டு, காணாமல் போனோரின் உறவுகளின் உரையாடலைச் [illegible] இருந்தார். அதன் பின் [illegible] வாக்குறுதியும் வழங்காமல் எழுந்து போய்விட்டார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்,

“ கடந்த 9 மாதங்களாக நாங்கள் எங்கள் உறவுகளை மீட்க , நடுத்தெருவில் இருந்து போராடி வருகிறோம். பலமுறை ஜனாதிபதியைச் சந்தித்து எங்கள் கோரிக்கைகளை முன்வைக்க எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. இந்த நிலையில் கிளிநொச்சிக்குத் திறப்பு விழாவுக்காக ஜனாபதி வந்தபோது , அவரைச் சூழ்ந்து கொண்டு எங்களுடன் ஆறுதலாகக் கதைக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டோம். அதனடிப்படையிலேயே இன்றைய ( நேற்று) சந்திப்பு இடம்பெற்றது.

### அரச படைகளிடமே ஒப்படைத்தோம் அரசே பதில் கூற வேண்டும்

ஆனால் இந்தச் சந்திப்பில் அவர் ” மூவினத்திலும் காணாமலாக்கப்பட்டோர் உள்ளனர்” என்று எம்மிடம் சொன்னார். அதற்கு நாம், “ ஏனைய இனத்தவர்கள் அரசுக்கு எதிரான அமைப்போடு போராடும் போது காணாமல் போனார்கள். ஆனால் எங்கள் பிள்ளைகளை நாம் அரச படைகளிடம் ஒப்படைத்த பின்னரே காணாமல் போயுள்ளனர். ஆகவே தமது படைகளிடம் ஒப்படைக்கப்படவர்களுக்கு அரசுதான் பதில் சொல்ல வேண்டும்.” என்று சொன்னோம். ஆனால் அதற்கும் ஜனாதிபதி சாதகமான பதிலேதும் கூறவில்லை. அவரும், சிவஞான சோதியும் , நாம் எதைக் கேட்டாலும் கடைசியில் அதைக் கொண்டுவந்து காணாமல் போனோர் அலுவலகத்தில் முடிப்பதிலேயே குறியாக இருந்தார்களே தவிர எமது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற அக்கறையைக் காட்டவில்லை.

இந்த அரசு எம்மையும், சர்வதேசத்தையும் ஏமாற்றவே ‘காணாமல் போனோர் அலுவலகம்’ என்ற ஒன்றைத் திறக்கவுள்ளது. இப்படிப்பட்ட அரசு மீது எப்படி நம்பிக்கை வைப்பது. எனவே சர்வதேசமும், புலம்பெயர் உறவுகளுமே எமக்கான நீதியையும், தீர்வையும் பெற்றுத்தர வேண்டும்” என்று தெரிவித்தனர். (அ)

## பொலிகண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் மட்டும் தனியே வாழ்ந்து வந்தார் எனவும் கூறப்படுகிறது.

நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வசித்து வந்த இவர், திடீரெனச் சடலமாக வீட்டில் இருந்ததை அயலில் இருந்தவர்கள் நேற்றுக் கண்டனர். இதனையடுத்து அவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, சடலம் மீட்கப்பட்டு, மேலதிக விசாரணைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


எமர்சன் நங்கவா

# சிம்பாப்வேயில் இயல்பு திரும்பும்

சிம்பாவே,நவ.17

நாட்டைத் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாக, சிம்பாவேயின் இராணுவம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவர் அல்ஃபா கொண்டே, ஒரு வகையில் இது இராணுவப் புரட்சியே என்று விமர்சித்துள்ளார்.

சிம்பாவேயின் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும், எனினும் அவர் வீட்டுக் காவலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 93 வயதான ரொபர்ட் முகாபே, சிம்பாவேயின் அடுத்த ஜனாதிபதியாகத் தனது மனைவியை நியமிக்க முயற்சி எடுத்ததாகக் கூறப்படுகிறது.

இதனால், அந்த நாட்டின் பிரதி ஜனாதிபதியாக இருந்த எமர்சன் நங்கவா கடந்த வாரம் பதவி நீக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தார். இதனை அடுத்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் ஒரு கட்டமாகவே, இராணுவம் அந்த நாட்டின் கட்டுப்பாட்டைத் தம்வசப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராணுவப் புரட்சியையடுத்து, விசேட விமானம் மூலம் எமர்சன் சிம்பாவேக்கு வந்தார். " நாட்டில் மீண்டும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் தெரிவித்தார். (இ)

# கபாலியை மிஞ்சிய மெர்சல்



சென்னை,நவ.17

'மெர்சல்' படத்தின் டீசர் 'கபாலி' படத்தின் டீசர் சாதனையை முறியடித்துள்ளது.

விஜய் நடிப்பில் வெளியான 'மெர்சல்' படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. அட்லி இயக்கிய இந்தப் படம் பல்வேறு தடைகளைத் தாண்டி திரைக்கு வந்தது.

இந்தப் படத்தில் ஜி.எஸ்.டி. தொடர்பான வசனங்கள், மருத்துவத்துறை முறைகேடு உட்பட பல்வேறு பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து 'மெர்சல்' படத்தைப் பார்ப்பவர்கள் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்தது.

இந்தப் படத்தின் வசூல் 200 கோடியைத் தாண்டியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தெலுங்கில் 'அதிரிந்தி' என்ற பெயரில் 'மெர்சல்' படம் வெளியானது. அங்கும் வசூலில் சாதனை படைத்துள்ளது. இது ஒரு புறம் இருக்க மெர்சல் படத்தின் டீசர் புதிய மைல்கல்லைத் தொட்டு சாதனையை நிலைநாட்டியுள்ளது. மேலும் கபாலி படத்தின் டீசர் சாதனையையும் மெர்சல் முறியடித்துள்ளது. கபாலி டீசர் இதுவரை 34,582,207 பார்வையாளர்களைப் பெற்றுள்ள நிலையில், மெர்சல் டீசர் 34,605,562 பார்வையாளர்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)



# அருவருக்கும் டிரம்பின் 'குடி'

வொஷிங்டன்,நவ.17

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆசிய சுற்றுப்பயணம் தொடர்பாக தொலைக்காட்சியில் உரையாற்றிய போது, அநாகரீகமான முறையில் தண்ணீர் குடித்தார்.

அமெரிக்க அதிபரான டொனால்ட் டிரம்ப் ஆசிய நாடுகளில் 12 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பின்னர் நாடு திரும்பிய அவர் இந்தச் சுற்றுப் பயணம் தொடர்பாக தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் நேரடி உரை நிகழ்த்தினார். அப்போது அவருக்குத் திடீரெனத் தாகம் ஏற்பட்டது. இதனால் பக்கத்தில் தண்ணீர் போத்தல் ஏதும் இருக்கிறதா? என்று தேடினார். அவர் பேசிக்கொண்டிருந்த இடத்துக்குக் கீழே தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது.

அவருடைய உதவியாளர் அதை அவருக்குச் சுட்டிக் காட்டினார். உடனே போத்தலை எடுத்து, உதட்டை ஒரு மாதிரியாக நெளித்து தண்ணீர் குடித்தார். இது பார்போருக்கு அருவருப்பை ஏற்படுத்தியது.

டொனால்ட் டிரம்ப் குடியரசுக் கட்சியில் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட நேரத்தில், அவருக்கு எதிராக அந்தக் கட்சியில் செனட் உறுப்பினர் மார்கோரூபியோ போட்டியிட்டார். அவர் 2013ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது இதேபோல அநாகரீகமான முறையில் தண்ணீர் குடித்தார். அதை அப்போது கிண்டல் செய்து டொனால்ட் டிரம்ப் தனது ருவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தற்கொலைத் தாக்குதல் நைஜீரியாவில் 14 பேர் பலி!



நைஜீரியா,நவ.17

நைஜீரியாவில் ஒரே இடத்தில் 4 தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடபகுதியில் இஸ்லாமிய தேசம் அமைக்கும் முயற்சியில், கொடூரமான தாக்குதல்களை நடத்தி வரும் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு பொதுமக்களையும் கடத்திக் கொலை செய்து வருகிறது. மைதுகுரி நகர் மற்றும் பிற பகுதிகளில் தொடர்ந்து தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரை இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில், போர்னோ மாநிலத் தலைநகரான மதுகுரியில் நேற்று 4 தற்கொலைத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மூனா கரி புறநகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். 29 பேர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்திய இரண்டு பெண்கள் உள்ளிட்ட 4 பேரும் உயிரிழந்தனர். (இ)

# கிரீஸில் கனமழை: 14 பேர் பலி!



எதென்ஸ்நவ.17

கிரீஸ் நாட்டின் எதென்ஸ் நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். கிரீஸ் நாட்டில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் தண்ணீர் சூழ்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. முக்கிய சாலைகள் வெள்ளத்தினால் மூடப்பட்டன. [illegible] தீவில் தொடர்ந்து பெய்த மழையால் வீடுகள், கடைகளுக்குள் வெள்ளம் புகுந்தது. வாகனங்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டன. மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இதையடுத்து அங்கு அவசர நிலை, பிரகடனம் செய்யப்பட்டது.

தண்ணீர் சூழ்ந்த பகுதிகளில் தீயணைப்புப் படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, உயிரிழப்பு மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. இந்த உயிரிழப்புக் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஜ், இது தேசிய துக்க நாள் என அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாராணியின் கல்யாண வைபோகம்

லண்டன்,நவ.17

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது கணவர் பிலிப்புடன் 70ஆவது ஆண்டு திருமண நாளை நேற்று முன்தினம் புதன்கிழமை மிக எளிமையாகக் கொண்டாடினார்.

பிரிட்டனின் கடற்படை அதிகாரியான பிலிப்புக்கும், அந்நாட்டு மகாராணியான எலிசபெத்துக்கும் கடந்த 1947 ஆம் ஆண்டு நவம்பரில் திருமணம் நடைபெற்றது. பிரமாண்டமாக நடந்த திருமணத்தில் உலகின் முக்கிய தலைவர்களும், பெரும் புள்ளிகளும் கலந்து கொண்டனர்.

உண்மைக் காதலுக்கு எடுத்துக்காட்டாக இருவரும் கடந்த 70 ஆண்டுகளாக சிறந்த தம்பதியராக வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில், 96 வயதான பிலிப்பும், 91 வயதான எலிசபெத்தும் தங்களது 70ஆவது ஆண்டு திருமண நாளை எளிய முறையில் கொண்டாடியுள்ளனர்.

லண்டனில் உள்ள விண்டோர் கேஸ்டல் அரச குடும்ப வீட்டில் திருமண விழா கொண்டாடப்பட்டது. இதில் முக்கிய குடும்ப உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொண்டதாகப் பக்கிங்காம் அரண்மனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமண நாளையொட்டி எந்தவொரு பொது நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. (இ)

# மழையால் குழம்பிய முதல் டெஸ்ட்



கொல்கத்தா, நவ. 17

இலங்கை- இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா திணற ஆரம்பித்தபோது, மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதியில் இடைநிறுத்தப்பட்டது.

இந்தியா சென்றுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட்கள், 3 ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது.

இதில், இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவிருந்தது. எனினும், மழை காரணமாக பிற்பகல் 1.30 மணிக்கே ஆட்டம் ஆரம்பித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் இந்தியாவைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்தார் இலங்கையின் லக்மால்.

முதல் பந்தை எதிர்கொண்ட லோகேஸ் ராகுல், அந்தப் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.அவரைத் தொடர்ந்து ஆட்டத்தின் 6.2ஆவது ஓவரில் தவான் (8) நடையைக் கட்டினார். பின்னர் வந்த அணித்தலைவர் விராட் கோஹ்லி, 11 பந்துகளைத் தின்றுவிட்டு முட்டை போட்டுச் சென்றார்.

இந்திய அணி 10.1ஆவது ஓவரில் வெறும் 17 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், முன்னணி 3 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து இக்கட்டான நிலைக்குச் சென்றது.

இந்நிலையில், மேலும் 10 பந்துகள் வீசப்பட்ட நிலையில், அதாவது 11.5ஆவது ஓவரில் மீண்டும் மழை தனது விளையாட்டைக் காட்டத் தொடங்கியது.

இதனால் தடைப்பட்ட ஆட்டம் பின்னர் நடைபெற வாய்ப்பில்லாமல் போனது. இதையடுத்து நேற்று முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டது.

ஆட்டம் கைவிடப்பட்டபோது, இந்திய அணியின் புஜாரா (8), ரஹானே (0) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

இலங்கை அணி சார்பாகப் பந்துவீச்சில் கலக்கிய லக்மல், 6 ஓவர்கள் வீசி ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 3 விக்கெட்டுகளைச் சாய்த்திருந்தார். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும். (ஐ)



# இலங்கையால் அது முடியாது!

கொல்கத்தா, நவ.17

“இந்திய அணியின் தொடர் வெற்றிக்கு முட்டுக்கட்டை போட தென்னாபிரிக்கா அணியால் மட்டுமே முடியும்” என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரஸல் ஆர்னோல்ட் கூறியுள்ளார். இந்தியா சென்றுள்ள இலங்கை அணி, முதலில் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. மழை காரணமாக மைதானத்தில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால், முதல் நாள் ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா அணி 3 விக்கெட் இழப்புக்கு 17 ஓட்டங்களையே எடுத்திருந்தது.

இந்நிலையில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரஸல் ஆர்னோல்ட், “இந்திய அணி தற்போது மிகச்சரியான பாதையில் சென்று கொண்டு இருக்கிறது. இந்தப் பாதையில் முட்டுக்கட்டை போடும் தகுதி, இலங்கை அணிக்கு இல்லை. ஆனால் இந்திய அணிக்கு உண்மையான சவாலே தென்னாபிரிக்க மண்ணில் தான் உள்ளது. அது தான் உண்மையான சவால் ”என்று கூறியுள்ளார். (அ)

## சாதிப்பாரா லக்மால்?

இந்தியாவுக்கு எதிராக நேற்று ஆரம்பித்த டெஸ்ட் போட்டியில், 36 பந்துகளை வீசி ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 3 விக்கெட்டுகளைச் சாய்த்த லக்மால் இன்னும் 4 பந்துகளை ஓட்டமற்றதாக வீசும் பட்சத்தில் புதியதொரு சாதனையைப் படைப்பார்.

2015ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளின் ஜெரோம் டெயிலர், தொடர்ச்சியாக 40 பந்துகளை ஓட்டமற்றதாக வீசி சாதனை படைத்தார். இந்தச் சாதனையை முறியடிப்பதற்கான வாய்ப்பு தற்போது லக்மாலுக்குக் கிடைத்துள்ளது.

இன்றையதினம் அவர் 4 பந்துகளை ஓட்டமற்றதாக வீசினால், ஏற்கனவே உள்ள சாதனையைச் சமன் செய்வார். அதேவேளை, 5 பந்துகளை ஓட்டமற்றதாக வீசினால் சாதனைக்குத் தனியொருவராக உரிமை கொண்டாட முடியும். (ஐ)

## தோழியை மணக்கும் மெகன்





ஆஸ்திரேலியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான மெகன் ஸ்கட், தனது தோழியை விரைவில் மணக்கவுள்ளார். இதுகுறித்த அறிவிப்பை அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மெகன் ஸ்கட். ஓரின சேர்க்கை விரும்பியான இவர் தனது தோழி ஜெஸ் ஹோலியாக்குடன் நெருங்கிப் பழகி வந்தார்.

தற்போது ஆஸ்திரேலியாவில் ஓரினச் சேர்க்கையாளர் திருமணத்தை சட்டபூர்வமாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இதையடுத்து தனது நீண்ட காலத் தோழியை விரைவில் மணக்கவுள்ளார் என 24 வயதான மெகன் ஸ்கட் ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இவரது அறிவிப்பைத் தொடர்ந்து பலரும் கேலி செய்து வருகின்றனர். (ஐ)



## தடை!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான மொகமது ஹபீஸின் பந்துவீச்சு ஐ.சி.சி. விதிமுறைக்கு மாறாக இருப்பதால், இரண்டு ஆண்டுகள் அவருக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# 32 அணிகளும் ரெடி!



உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான 32 அணிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில், பெரு அணி நேற்றுக் கடைசியாக இணைந்துள்ளது.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள 32 அணிகளில், போட்டியை நடத்தும் ரஷ்யா நேரடியாகவும், ஏனைய அணிகள் தகுதி காண் போட்டிகள் மூலமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தகுதிகாண் போட்டிகளில்ல் 6 கண்டங்களிலிருந்து 210 நாடுகள் விளையாடின. 30 நாடுகள் நேற்று முன்தினம் வரை தகுதி பெற்றன. நேற்றுக் காலை கடைசி அணியாக தென்னமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த பெரு உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது.

லிமா நகரில் நடந்த இந்த ஆட்டத்தில் பெரு அணி, 2-0 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வீழ்த்தியது. இரு அணிகள் மோதிய முதல் சுற்று ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையானது. இந்நிலையில், 2ஆவது சுற்றில் வெற்றி பெற்றதன் மூலம் பெரு அணி தகுதி பெற்றது.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கத் தகுதி பெற்ற 32 நாடுகளின் விபரம் வருமாறு:-

ரஷ்யா (போட்டியை நடத்தும் நாடு), பிரேசில் (5 தடவைகள் சம்பியன்), ஈரான், ஜப்பான், மெக்சிக்கோ, பெல்ஜியம், தென்கொரியா, சவூதி அரேபியா, ஜேர்மன் (4), இங்கிலாந்து (1), ஸ்பெயின் (1), நைஜீரியா, கோஸ்டாரிகா, போலந்து, எகிப்து, ஐஸ்லாந்து, செர்பியா, போர்த்துக்கல், பிராண்ஸ் (1), உருகுவே (2), ஆர்ஜென்ரீனா (2), கொலம்பியா, பனாமா, செனகல், மொராக்கோ, துனிசியா, சுவிட்சர்லாந்து, குரோஷியா, சுவீடன், டென்மார்க், ஆஸ்திரேலியா, பெரு.

இதில் பனாமா, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதல் முறையாக உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கவுள்ளன. 4 தடவைகள் சம்பியனான இத்தாலி, நெதர்லாந்து, சிலி, அமெரிக்கா, கானா போன்ற முன்னணி நாடுகள் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தன.

உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள 32 நாடுகளும் எந்தெந்தப் பிரிவில் இடம்பெறும் என்பதற்கான குலுக்கல் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும். (ஐ)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 17.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.